
**அக்டோபர் – 26**

# TNPSC துளிகள்

- இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள், திறன்களை மேம்படுத்துவதற்காகவும், சுதந்திரமான மற்றும் தடையற்ற இந்தோ-பசிபிக் பெருங்கடல் பிராந்தியத்தினை ஊக்குப்பதற்காகவும் கியூஷு மற்றும் யோகோசுகா (ஜப்பான்) கடல் பகுதியில் ஜப்பான் - இந்தியா கடல்சார் பயிற்சி 2025 (JAIMEX 25) என்ற பயிற்சியினை நடத்தின.
- கோவாவின் பனாஜியில் நடைபெற்ற ஒரு கலாச்சார விழாவில் 2025 ஆம் ஆண்டு FIDE சதுரங்க உலகக் கோப்பைப் போட்டிக்கான அதிகாரப்பூர்வ முத்திரை மற்றும் கீதத்தை இந்தியா வெளியிட்டது.
    - உலக கோப்பைப் போட்டிகளானது, வடக்கு கோவாவில் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 31 முதல் நவம்பர் 27 ஆம் தேதி வரை நடைபெற உள்ளன.
- 2009 ஆம் ஆண்டு முதல், மாதவிடாய் நிறுத்தத்தை எதிர்கொள்ளும் பெண்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் அதை எதிர்கொள்பவர்களின் அனுபவங்களை மேம்படுத்துவதற்காகவும் ஆண்டுதோறும் அக்டோபர் 18 ஆம் தேதி அன்று உலக மாதவிடாய் நிறுத்த தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Lifestyle Medicine in Menopausal Health" என்பதாகும்.
- ஒவ்வோர் ஆண்டின் அக்டோபர் மாதத்திலும், இயங்கலையில் பாதுகாப்பாக இருப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதற்காக தேசிய இணையவெளிப் பாதுகாப்பு விழிப்புணர்வு மாதம் (NCSAM) ஆனது உலகளவில் அனுசரிக்கப்படுகிறது.
    - இந்தியாவில், 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, பாதுகாப்பான இணையவெளி கொண்ட இந்தியா என்று பொருள்படும் “Cyber Jagrit Bharat” என்பது ஆகும்.

# சர்வதேசச் செய்திகள்

## இராமானுஜன் ஆராய்ச்சி உதவித் தொகைத் திட்டம்




- இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகள் ஆனது இளம் இந்திய அறிவியலாளர்கள் ஐக்கியப் பேரரசில் பணிபுரிய உதவுகின்ற இராமானுஜன்

இளையோர் ஆராய்ச்சியாளர்கள் திட்டத்தைத் தொடங்கியுள்ளன.

- இது இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் (DST) நிதியளிக்கப் படுகிறது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட PhD (முனைவர் பட்டப் படிப்பு) மாணவர்கள் இலண்டன் கணித அறிவியல் கல்வி நிறுவனத்தில் (LIMS) ஆராய்ச்சி மேற்கொள்வார்கள்.
- LIMS ராயல் நிறுவனத்தின் ஒரு பகுதியாகும் மற்றும் தத்துவார்த்த ஆராய்ச்சி மற்றும் முக்கிய அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு பெயர் பெற்றதாகும்.

## காபூல் திட்டம்





- ஆப்கானிஸ்தானின் காபூலில் உள்ள அதன் தொழில்நுட்ப அமைப்பினை உடனடியாக அமலுக்கு வரும் வகையில் முழு தூதரகமாக இந்தியா மேம்படுத்தியுள்ளது.
- ஆப்கானிஸ்தானின் வெளியுறவுத் துறை அமைச்சர் சமீபத்தில் இந்தியாவிற்கு வருகை தந்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- ஒரு முழுத் தூதர் நியமிக்கப்படும் வரை ஒரு பொறுப்பாளர் இந்தத் தூதரகத்தை வழி நடத்துவார்.
- தாலிபான்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் காபூலில் உள்ள தனது தூதரகத்தை இந்தியா மூடியது.
- மனிதாபிமான மற்றும் தூதரக உதவிகளை வழங்குவதற்காக தொழில்நுட்பத் திட்டம் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் செயல்பட்டு வந்தது.

## அங்கீகரிக்கப்பட்ட பொருளாதாரச் செயல்பாட்டாளர்கள் திட்டம்

- அங்கீகரிக்கப்பட்ட பொருளாதாரச் செயல்பாட்டாளர்கள் (AEO) திட்டம் என்பது உலகச் சுங்க அமைப்பின் (WCO) SAFE கட்டமைப்பின் கீழ் ஒரு தன்னார்வ வர்த்தக வசதி முன்னெடுப்பாகும்.
- இது 2016 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் தேதியன்று, மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்தின் (CBIC) கீழ் இந்தியச் சுங்கத்தால் செயல்படுத்தப்பட்டது.

- இந்தத் திட்டமானது, சுங்கச் சட்டங்களுக்கு இணங்கி பாதுகாப்பான சர்வதேச விநியோகச் சங்கிலிகளைப் பராமரிக்கும் நம்பகமான வர்த்தகர்களை அங்கீகரிக்கிறது.
- இது விநியோகச் சங்கிலி பாதுகாப்பை மேம்படுத்துதல், வணிகம் செய்வதை எளிதாக்குதல் மற்றும் இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், தளவாட வழங்குநர்கள் மற்றும் கிடங்கு இயக்குனர்களுக்கு சுங்க வசதி சலுகைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- AEO சான்றிதழ் ஆனது தளவாடங்கள் மற்றும் பிற இயக்குனர்களுக்கு கூடுதல் AEO-LO உடன் AEO-T1, AEO-T2, மற்றும் AEO-T3 ஆகிய மூன்று நிலைகளைக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது விரைவான சுங்க அனுமதி, ஒத்திவைக்கப்பட்ட வரி செலுத்துதல்கள், பரஸ்பர அங்கீகார ஒப்பந்தங்கள் மூலம் உலகளாவிய அங்கீகாரம் மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட வர்த்தக இணக்கத்தை வழங்குகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## LCA தேஜாஸ் Mk1A





- LCA (இலகுரக போர் விமானம்) தேஜாஸ் Mk1A ஆனது, அதன் முதல் பறத்தல் பயிற்சியினை HAL நிறுவனத்தின் (இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட்) நாசிக் மையத்தில் மேற்கொண்டது.
- பாதுகாப்புத் துறை அமைச்சகமானது LCA Mk1A விமானத்திற்கான மூன்றாவது

உற்பத்தி தொடரினையும் HTT-40 (இந்துஸ்தான் டர்போ டிரெய்னர்-40) விமானத்திற்கான இரண்டாவது உற்பத்தித் தொடரினையும் தொடங்கி வைத்தது.

- இந்த விமானம் GE ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் F404–IN20 எஞ்சின் மூலம் இயக்கப் படுகிறது.
- நாசிக் மையமானது ஆண்டுதோறும் எட்டு விமானங்களை உற்பத்தி செய்யக் கூடியது, இது HAL நிறுவனத்தின் மொத்த உற்பத்தித் திறனை ஆண்டிற்கு 24 LCA Mk1A விமானங்களாக உயர்த்தும்.

## சினாபிக் அமிலம்





- ஆராய்ச்சியாளர்கள், நீரிழிவு நோய் சார்ந்த காயங்களுக்கு ஒரு சாத்தியமான சிகிச்சையாக சினாபிக் அமிலத்தை அடையாளம் கண்டுள்ளனர்.
- வாய்வழியாக சினாபிக் அமிலத்தை வழங்குதல் SIRT1 பாதையை செயல்படுத்துவதன் மூலம் காயங்களைக் குணப்படுத்துவதை துரிதப்படுத்துகிறது என்று ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது.
- SIRT1 பாதையானது, திசுக்களை சீர் செய்தல் மற்றும் திசு வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்ட அமைப்பாகும்.
- நீரிழிவு சார்ந்த காயங்களைக் குணப்படுத்துவதில் இந்த சேர்மத்தின் வாய்வழி உட் செலுத்தல் செயல்திறனை நிரூபிக்கும் முதல் உலகளாவிய ஆய்வு இதுவாகும்.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது உறுப்புகளை துண்டிப்பதைக் குறைக்கவும், நீரிழிவு சார்ந்த கால் புண்களிலிருந்து மீள்வதை விரைவுபடுத்தவும் உதவும்.

## சந்திரனில் அரிய விண்கற்கள்

- சீன அறிவியலாளர்கள் சங்-இ-6 கலத்தினால் புவிக்குக் கொண்டு வரப்பட்ட சந்திர மண்ணில் அரிய விண்கல் அடையாளங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.
- ஆராய்ச்சியாளர்கள் வெளிப்புற சூரிய மண்டலத்திலிருந்து தோன்றிய CI காண்டிரைட் துண்டுகள், நீர் மற்றும் கார்பன் நிறைந்த விண்கற்களை அடையாளம் கண்டனர்.

- புவி-சந்திரன் அமைப்பு ஆனது முன்னர் அறியப்பட்டதை விட அதிக கார்பனேசிய காண்டிரைட் தாக்கங்களை எதிர் கொண்டதாகவும், மேலும் இது நிலவில் நீரின் தோற்றத்தை விளக்கக் கூடும் என்றும் கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றன.
- 2024 ஆம் ஆண்டில் நிலவின் தொலைதூரப் பகுதியான ஐட்கன் எனும் தென் துருவப் படுகையிலிருந்து சங்'இ-6 விண்கலம் 1,935.3 கிராம் எடை கொண்ட மாதிரிகளை புவிக்குத் திருப்பி அனுப்பியது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### IUCN அமைப்பின் 90வது உறுப்பினர் - துவாலு




Tuvalu has joined the International Union for Conservation of Nature (IUCN) as its 90th State Member, strengthening its role in global conservation and climate resilience efforts.


- துவாலு நாடானது IUCN அமைப்பின் 90வது உறுப்பினராக மாறியுள்ளது.
- இது மேற்கு-மத்திய பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள ஒரு சிறிய பாலினேசிய தீவு நாடு ஆகும்.
- துவாலு வெறும் 26 சதுர கிலோமீட்டர் அளவிலான நிலப்பரப்புடன் 676 கிலோமீட்டர் பரப்பளவிலான 9 வளைய வடிவப் பவளப் பாறைத் தீவுகள்/அட்டோல்கள் மற்றும் பவளப்பாறைத் தீவுகளைக் கொண்டுள்ளது.
- துவாலுவின் தலைநகரம் ஃபனாஃபுட்டி அட்டோலில் அமைந்துள்ள வையாகு ஆகும்.
- இந்தத் தீவுகள் கடல் மட்டத்திலிருந்து 4 முதல் 5 மீட்டர் உயரத்தில், மிகவும் தாழ்வான

மட்டத்தில் அமைந்தவையாகும்.

❖ துவாலுவில் ஆறுகள் இல்லை, இது மழைநீர் மற்றும் நன்னீர் ஊற்றுகளை/கிணறுகளை சார்ந்துள்ளது.

❖ துவாலு ஆனது பவளப்பாறைகள் மற்றும் புலம்பெயர்ந்த இனங்கள் உட்பட அதன் வளமான கடல் சார் பல்லுயிர் பெருக்கத்திற்கு பெயர் பெற்றது.

## உலகளாவிய வனத் தரவரிசை 2025




❖ 2025 ஆம் ஆண்டில் வனப்பகுதிப் பரவலின் அடிப்படையில் இந்தியா உலகளவில் 9 வது இடத்திற்கு உயர்ந்துள்ளது.

❖ ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (FAO) படி, வருடாந்திர நிகர வனப் பரவல் சேர்க்கையில் இந்தியா 3 வது இடத்தைப் பிடித்துள்ளது.

❖ இந்தியாவின் வனப்பகுதி 72.7 மில்லியன் ஹெக்டேராகக் கூறப் படுகிறது என்ற ஒரு நிலையில் இது உலகின் மொத்த வனப்பகுதியில் சுமார் 2 சதவீதமாகும்.

❖ 1990 ஆம் ஆண்டு முதல், இந்தியா மற்றும் சீனா ஆகியவற்றின் அதிகப் பங்குடன் வனப் பகுதி அதிகரிப்பை எதிர்கொள்ளும் ஒரே கண்டம் ஆசியா ஆகும்.

❖ உலகளவில், ரஷ்யா 832.6 மில்லியன் ஹெக்டேர் காடுகளைக் கொண்டுள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து பிரேசில், கனடா, அமெரிக்கா மற்றும் சீனா உள்ளன.


# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## காடுகள் குறித்த UNEP அறிக்கை 2025

❖ "High-risk Forests, High-value Returns: A Co-benefits Assessment for Decision-makers" என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையானது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு (UNEP) மூலம் வெளியிடப்பட்டது.

❖ சுமார் 391 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவில் அதிக ஆபத்துள்ள வெப்பமண்டல காடுகளைப் பாதுகாப்பதன் உலகளாவிய முக்கியத்துவத்தை இந்த அறிக்கை ஆராய்கிறது.

- அதிக காடழிப்பு அபாயத்தை எதிர்கொள்கின்ற இந்தக் காடுகள் மக்களுக்கும் புவிக் கிரகத்திற்கும் அவசியமானவையாகும்.
- இந்தக் காடுகளைப் பாதுகாப்பது பெரியளவிலான கார்பன் உமிழ்வைத் தடுக்கிறது மற்றும் நீர் மற்றும் மண் சீர்முறை, மழை நீர் மறுசுழற்சி, மகரந்தச் சேர்க்கை, உணவுப் பாதுகாப்பு மற்றும் 25 மில்லியன் ஏழை மக்களுக்கான வாழ்வாதாரம் போன்ற பல நன்மைகளை வழங்குகிறது.
- ஆண்டுதோறும் பருவநிலை தொடர்பான சேதங்களில் 81 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிலான இழப்புகளைத் தவிர்க்க வளங்காப்பு உதவுகிறது.
- இந்தக் காடுகளிலிருந்து பெறப்படும் சுற்றுச்சூழல் அமைப்புச் சேவைகள் ஆனது வன வளங்களைச் சார்ந்துள்ள பெண்கள் மற்றும் பழங்குடியின மக்களுக்கு மிகவும் முக்கியமானவையாகும்.
- வேளாண்மை, மரப் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு நன்மைகளை சமநிலைப்படுத்த மேம்பாடு மற்றும் பாதுகாப்பை ஒருங்கிணைப்பதை இந்த அறிக்கையானது நன்கு அறிவுறுத்துகிறது.
- அதிகபட்சப் பருவநிலை, பல்லுயிர் மற்றும் சமூக வருமானத்திற்கான நிதியை எங்கு மையப்படுத்தி செலுத்துவது என்பது குறித்து பல்வேறு கொள்கை வகுப்பாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் அரசாங்கங்களுக்கு வழி காட்ட இது இடஞ்சார்ந்தத் தரவை வழங்குகிறது.




## உலகளாவிய கல்வி அறிக்கை 2025

- 2025 ஆம் ஆண்டு உலகளாவிய கல்வி அறிக்கையானது யுனெஸ்கோ அமைப்பினால் வெளியிடப்பட்டது.
- உலகளவில் 133 மில்லியன் பெண்கள் பள்ளிக்குச் செல்வதில்லை என்பதை இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.
- 1995 ஆம் ஆண்டு பெய்ஜிங் பிரகடனத்திற்குப் பிறகு, 91 மில்லியனுக்கும் அதிகமான பெண்கள் தொடக்கப் பள்ளியிலும், 136 மில்லியனுக்கும் அதிகமான பெண்கள் மேல்

நிலைப் பள்ளியிலும் படிக்கின்றனர்.

- மத்திய மற்றும் தெற்காசியா இடைநிலைக் கல்வியில் பாலினச் சமத்துவத்தை அடைந்துள்ளன.
- வறுமை, மோதல் மற்றும் கிராமப்புற தனிமை காரணமாக ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதி மற்றும் ஓசியானியா ஆகியவை பின்தங்கியுள்ளன.
- மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் மட்டுமே முதன்மை மட்டத்தில் கட்டாயப் பாலியல் கல்வியை வழங்குகின்றன என்பதோடு பாடப் புத்தகங்கள் பெரும்பாலும் பாலினம் சார்ந்த சார்பு நிலையை வலுப்படுத்துகின்றன.
- பெரும்பாலான ஆசிரியர்கள் பெண்களாக உள்ளனர், ஆனால் உலகளவில் உயர்கல்வி தலைமைப் பதவிகளில் 30% மட்டுமே பெண்கள் வகிக்கின்றனர்.





## மாநிலச் செய்திகள்

### மூங்கில் தோட்டத் திட்டம்

- பசுமை இந்தியா சவால் (GIC) முன்னெடுப்பானது, தெலுங்கானாவின் அடிலாபாத் மாவட்டத்தில் உள்ள முல்லகுட்டா 2 என்ற கிராமத்தில் ஒரு மூங்கில் தோட்டத்திற்கான சோதனைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது, எளிதில் பாதிக்கப்படக் கூடிய பழங்குடி குழுவினரான (PVTG) கோலம் ஆதிவாசிகளின் பாரம்பரிய வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வன வளங்களை அணுகுவதில் கட்டுப்பாடுகள் இருப்பதால் கோலம் பழங்குடியினர் எதிர்கொள்ளும் மூங்கில் பற்றாக்குறையை இது நிவர்த்தி செய்கிறது.
- GIC நிறுவனர் சந்தோஷ் ஜோகினபள்ளி தலைமையிலான இந்த முன்னெடுப்பு, நிலையான மூங்கில் விநியோகம் மற்றும் மேம்பட்ட மூங்கில் கைவினைத்திறனில் பழங்குடியின கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதில் கவனம் செலுத்துகிறது.





## தீபத் திருவிழா 2025




- அயோத்தி தீபத் திருவிழா 2025 ஆனது கின்னஸ் உலக சாதனைகளைப் படைத்தது.
- சரயு நதிக்கரையில் அமைந்த அயோத்தி நகரில் 26.17 லட்சம் அகல் விளக்குகள் ஏற்றப் பட்டன.
- இந்த நிகழ்வில் 2,128 பூசாரிகளுடன் ஒரே நேரத்தில் மிகப்பெரிய ஆரத்தியும் நிகழ்த்தப் பட்டது.
- இந்த தீபத் திருவிழா கொண்டாட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் தொடங்கி ஒவ்வோர் ஆண்டும் சீராக மேம்பட்டு வருகின்றன.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## சமூக நீதிக்கான வைக்கம் விருது




- தமிழ்நாடு அரசானது 2025 ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான வைக்கம் விருதை அறிவித்துள்ளது.
- இந்த விருது அமெரிக்காவில் வசிக்கும் தலித் உரிமையியல் உரிமை ஆர்வலர் தேன்மொழி சௌந்தரராஜனுக்கு வழங்கப்பட உள்ளது.
- இது விளிம்புநிலைச் சமூகங்களின் நலனுக்காகப் பாடுபடும் தனிநபர்கள் அல்லது அமைப்புகளை கௌரவிக்கிறது.
- இது மறைந்த சமூக சீர்திருத்தவாதி ஈ.வெ. இராமசாமியின் நினைவாக நிறுவப்பட்டது.
- இந்த விருது 5 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு, ஒரு பாராட்டுப் பத்திரம் மற்றும் ஒரு பதக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

## BRICS சர்வதேச விருது 2025

- இந்த நிகழ்வினை ரஷ்யாவின் மாஸ்கோவில் உள்ள சர்வதேசப் பங்குதாரர்களுடன் இணைந்து BRICS கலாச்சார ஊடக மன்றம் ஏற்பாடு செய்தது.
- ஆன்மீக கல்வி மற்றும் கலாச்சார மேம்பாட்டிற்கான பங்களிப்புகளுக்காக அபுசுப்யன் கார்கரோவிற்கு இந்த விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.
- உலகளாவிய இசை மற்றும் கலாச்சாரத்திற்கான பங்களிப்புகளுக்காக மேஸ்ட்ரோ இகோர் எவார்ட்விற்கு இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- அறிவியல் மற்றும் அமைதி கட்டமைத்தல் ஆகியவற்றில் சாதனை படைத்ததற்காக டாக்டர் ஷபீர் ஹாசன் அவர்களுக்கு இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.



# முக்கிய தினங்கள்

## உலக குழந்தைகளின் எலும்பு மற்றும் மூட்டு தினம் 2025 - அக்டோபர் 19





- இந்த நாள் குழந்தைகளில் தசைக் கூட்டு நிலைமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முதன்முதலில் 2012 ஆம் ஆண்டு அக்டோபர் 19 ஆம் தேதியன்று அமெரிக்காவின் எலும்பு மற்றும் கூட்டு முன்னெடுப்பின் கீழ் குழந்தைகளுக்கான சிறப்புக் குழுவால் கொண்டாடப்பட்டது.
- இது குழந்தைகளில் எலும்பு மற்றும் மூட்டு கோளாறுகளைத் தடுப்பதையும் அவற்றை முன்கூட்டியே கண்டறிவதையும் எடுத்துக்காட்டுகிறது.

## உலக எலும்புப் புரை நோய் தினம் 2025 - அக்டோபர் 20

- எலும்புப் புரை நோய்/ஆஸ்டியோபோரோசிஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், ஆரம்பகால நோயறிதல், தடுப்பு மற்றும் சிகிச்சையை ஊக்குவிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது முதன்முதலில் 1996 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஆணையத்துடன் இணைந்து ஐக்கியப் பேரரசின் தேசிய எலும்புப் புரை நோய் சங்கத்தால் அனுசரிக்கப்பட்டது.
- உலகளவில், 50 வயதுடைய 3 பெண்களில் ஒருவரும், 5 ஆண்களில் ஒருவரும் ஆஸ்டியோபோரோடிக் எலும்பு முறிவுகளால் பாதிக்கப்படுகின்றனர்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "It's Unacceptable!" என்பதாகும்.




## தேசிய ஒற்றுமை தினம் 2025 - அக்டோபர் 20




- சமூகங்களிடையே ஒற்றுமை மற்றும் மீள்தன்மையை ஊக்குவிப்பதற்காகவும், சமூக நலன் மற்றும் அமைதிக்கான கூட்டு முயற்சிகளை ஊக்குவிப்பதற்காகவும் இது அனுசரிக்கப் படுகிறது.
- இந்த நாள் முதன்முதலில் 1966 ஆம் ஆண்டில் பிரதமர் இந்திரா காந்தி தலைமையில் நினைவு கூரப்பட்டது.
- 1962 ஆம் ஆண்டில் இந்த நாளில் தான், சீன-இந்தியப் போர் தொடங்கியது.
- 1962 ஆம் ஆண்டு நவம்பர் 20/21 தேதிகளில் ஒருதலைப் பட்சமான சீனாவின் போர் நிறுத்தத்துடன் அந்த மோதல் முடிவுக்கு வந்தது.

## உலகப் புள்ளி விவரங்கள் தினம் 2025 - அக்டோபர் 20




- புள்ளிவிவரங்களின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, உலகளவில் புள்ளி விவர நிபுணர்களை கௌரவிப்பதே இந்த நாளின் நோக்கமாகும்.
- இது முதன்முதலில் 2010 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் அனுசரிக்கப் பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Driving Change with Quality Statistics and Data for Everyone" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## அதானியின் கோடா மின் உற்பத்தி நிலையம்




- ஜார்க்கண்டில் உள்ள அதன் 1,600 மெகாவாட் திறன் கொண்ட கோடா அதி மிகை மாறு நிலை வெப்பநிலை மற்றும் அழுத்த அனல் மின் உற்பத்தி நிலையத்தை இந்திய மின் கட்டமைப்போடு இணைக்கும் அதானி பவர் லிமிடெட் நிறுவனத்தின் முன்மொழிவை மத்திய அரசு அங்கீகரித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் ஆக அறிவிக்கப்பட்ட இந்த ஆலை, நீண்ட கால ஒப்பந்தத்தின் கீழ் வங்காளதேசத்திற்குப்

பிரத்தியேகமாக மின்சாரம் வழங்கி வந்தது.

- கோடா மாவட்டத்தில் உள்ள 56 கிராமங்கள் வழியாகச் செல்லும் கஹல்கான் A–மைத்தான் B பாதை வழியாக இந்திய மின் கட்டமைப்புடன் இந்த நிலையத்தினை இணைக்க இந்த ஒப்புதல் அனுமதிக்கிறது.
- மின்சார அமைச்சகமானது, 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 164வது பிரிவின் கீழ், அதானி மின்னாற்றல் நிறுவனத்திற்கு தந்தி அதிகாரங்களைப் போன்றே, மின் பகிர்மான கம்பிகளின் நிறுவலுக்கான அதிகாரத்தை வழங்கியது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★